# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**

**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 07/2018** **நாள் : 29/03/2018**

**பெறுநர்**

மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழர்களே

வணக்கம்

ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு அவர்களை படிப்படியாக நிரந்தரப்படுத்த மாநில மையம் முயற்சி எடுத்து வருகிறது. நமது கடுமையான முயற்சியின் காரணமாக ஒப்பந்த சரத்தில் தினக்கூலியை ரூ.380/- ஆக உயர்த்தியதின் காரணமாக வாரியம் தற்போது தினக்கூலியை ரூ.250/-லிருந்து ரூ.380/ஆக உயர்த்தி உத்திரவு வெளியிட்டுள்ளது. ஆனாலும் அடையாளம் காணுவது சம்மந்தமாக எவ்வித உத்திரவும் வெளியாகவில்லை நாமும் தொடர்ந்து வாரிய அதிகாரிகளிடமும், மின்துறை அமைச்சரிடமும் வலியுறுத்தி வருகிறோம்.

இச்சூழ்நிலையில் நம்மை நம்பிருந்த ஒப்பந்த தொழிலாளர்கள் அங்காங்கே தன்னிச்சையாக போராடி வருவதை நாம் கவலையோடு பார்க்க வேண்டியுள்ளது. நாம் பார்வையாளர்களாக இல்லாமல் அவர்களை நம்மோடு இணைத்து, நாமும் அவர்களோடு இணைந்து போராட வேண்டிய அவசியமும் கடமையும் பொறுப்பும் நமக்குள்ளது என்பது, நாம் அனைவரும் அறிந்ததே

எனவே முதற்கட்டமாக ரூ.380/- கூலியை வழங்கிட கோரி இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பித்தின் அடிப்படையில் பூர்த்தி செய்து அவர்களிடம் கையொப்பம் பெற்று, அவர்களை ஒருங்கிணைத்து, தங்கள் கிளையின் பெயரில் உள்ள **கிளை லெட்டர் பேடில்** பட்டியலிட்டு 17.04.2018 அன்று உண்மையாக பணியாற்றி விண்ணப்பம் சமர்ப்பித்த பணியாளர்களோடு, நிரந்தர ஊழியர்களையும் இணைத்து பேரணியாக சென்று ஒப்பந்த ஊழியர்களின் பட்டியலை வழங்க வேண்டும். சம்மந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்களிடம் முன் கூட்டியே பேசி அனுமதி பெற்று அவர்களிடத்தில் பட்டியலை சமர்ப்பித்தால் நலமாக இருக்கும். கிளை நிர்வாகிகள் அவ்வாறு செல்லும் பொழுது, முன்னனியில் உள்ள ஒப்பந்த ஊழியரை அழைத்துச் செல்வது பொருத்தமாக இருக்கும்.

எனவே, அனைத்து கிளைச் செயலாளர்களும் காலம் குறுகிய காலமாக இருப்பதால் திட்டமிட்டு பணியாற்ற வேண்டுகிறோம்.

ஊதிய உயர்வு நன்கொடை படிவம் நமது Website -ல் உள்ளது. சுற்றறிக்கையுடனும் இனைத்துள்ளோம். இன்னும் சில தினங்களில் உத்திரவு பெறப்பட்டதும் பார்வை எண் கிளைகளுக்கு தெரிவிக்கப்படும். மேலும் அலுவலர்கள், பொறியாளர்கள், சகோதர தோழர்களிடம் ஊதிய உயர்வு நன்கொடை பெற தொகை குறிப்பிடப்பட்ட ரசீது புத்தகமும், *Blank* ரசீது புத்தகமும் ஓரிரு தினங்களில் அனுப்பி வைக்கப்படவுள்ளது. கிளைச் செயலாளர்கள் கூடுதல் கவனம் செலுத்தி வசூலிக்கப்பட வேண்டும், வசூல் முடிந்தவுடன் ஈவு தொகையுடன் அடிக்கட்டைகளையும் மாநில மய்யத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

**இணைப்பு**

1. **படிவம்**
2. **கிளைச் செயலாளர்கள் மேற்பார்வை பொறியாளர்களுக்கு சமர்பிக்க வேண்டிய கடித நகல்**

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (CITU)

## ஊதிய உயர்வு மற்றும் சம்பள பட்டுவாடா தொகையில் நன்கொடை பிடித்தம் செய்திட இசைவுக் கடிதம்

---

| **விடுநர்** | | **பெறுநர்** |
|---|---|---|
| பெயர் | ............................................ | மேற்பார்வை பொறியாளர் |
| பதவி பெயர் | ............................................ | செயற் பொறியாளர் |
| பணியிடம் | ............................................ | ............................................ |
| கோட்டம் | ............................................ | ............................................ |
| திட்டத்தின் பெயர் | ............................................ | ............................................ |

ஐயா,

பொருள் : **தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு சங்கத்திற்கு எனது ஊதிய உயர்வு/சம்பள பட்டுவாடா தொகையிலிருந்து நன்கொடையாக ரூ.1000/-ஐ பிடித்தம் செய்து சங்கத்தின் பொதுச் செயலாளரிடம் காசோலை மூலம் அளித்திட சம்மத கடிதம் வழங்குவது தொடர்பாக.**

**பார்வை :** . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

வணக்கம்,

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (பதிவு எண் 158/**CPT**) இப்போது மின்வாரியம் வழங்க உள்ள ஊதிய உயர்வு/சம்பள தொகையிலிருந்து ரூ. 1000/-ஐ நன்கொடையாக வசூலிக்க முடிவு செய்துள்ளது.

எனவே, எனக்கு வழங்கும் ஊதிய உயர்வு மற்றும் சம்பள தொகையில் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் அளித்த வேண்டுகோள் கடிதப்படி **ரூ.1000/-ஐ ஊதிய உயர்வு/சம்பளம் வழங்கிடும் தொகையில், ஏப்ரல் மாத சம்பளம் மே மாதத்தில் அளிக்கும் போது பிடித்தம் செய்திட முழுமையாக சம்மதம் தெரிவிக்கின்றேன்.**

இந்த கடிதத்தை எனது மனப்பூர்வமான சம்மதத்துடன் வழங்குகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

தங்கள் உண்மையுள்ள

தேதி . . . . . . . . . .

இடம் . . . . . . . . . .

கையொப்பம்

**கிளை லெட்டர் பேடு**

# *தமிழ்நாடு மின்ழியர் மத்திய அமைப்பு*

## *. . . . . . . . . . . . . . . . மின்வட்டக் கிளை*

---

**நாள்: 17.04.2018**

பெறுநர்

**மேற்பார்வை பொறியாளர் அவர்கள்,**

...........................மின் விநியோக வட்டம்,

.............................................................

அய்யா/அவர்கள்,

| | | |
|---|---|---|
| **பொருள்** | **:** | **நிர்வாகம் - ஒப்பந்த ஊழியர்களுக்கு தினக்கூலியாக ரூ.380/- வழங்கிட கோருதல்** |
| **பார்வை** | **:** | **(Per) (F.B) Tangedco Proceedings No. 04 dated 13/03/2018** |

தமிழக மின் வாரியத்தில்................................ மின் விநியோக வட்டத்தில் பல ஆண்டுகளாக இணைக்கப்பட்ட பட்டியலில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள் இவர்களை அடையாளம் கண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் என்று அறிவிக்க சங்கம் பல கட்ட போராட்டங்களை நடத்தி வந்தது, தற்போதும் நடத்தி வருகிறது.

எங்களது தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக ஊதிய உயர்வு முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ.380/- தினக்கூலியாக வழங்க சரத்து சேர்க்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதனையடுத்து பார்வையில் கண்ட வாரிய உத்திரவும் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில் பேரிடர் ஏற்பட்ட பொழுதெல்லாம் இந்த ஒப்பந்த ஊழியர்கள் சிறப்பாக பணி செய்து சீரான மின் விநியோகத்தை வழங்கியதை யாரும் மறக்க முடியாது என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

பட்டியலில் கண்ட ஒப்பந்த தொழிலாளர்கள் மின் உற்பத்தி , விநியோகம் பொதுக்கட்டுமானம் வட்டத்தில் தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றனர். எனவே இணைக்கப்பட்ட பட்டியலில் உள்ள இந்த ஒப்பந்த ஊழியர்களுக்கு வாரியமே நேரிடையாக ரூ.380/- தினக்கூலி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி**!

தங்களின் உண்மையுள்ள

**( கிளைச் செயலாளர் )**

**அனுப்புநர்**

**...................................**

**த/பெ** .........................................

.........................................பிரிவு அலுவலகம்

..........................................மின்பகிர்மான வட்டம்

**பெறுநர்**

**மேற்பார்வை பொறியாளர் அவர்கள்,**

..........................................மின்பகிர்மான வட்டம்

...........................................

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** **மின்வாரிய - நிர்வாகம் - ஒப்பந்த ஊழியரை அடையாளம் கண்டு ரூ.380/- கூலி வழங்கிட கோருதல் தொடர்பாக**

**பார்வை :** **(Per) (F.B) Tangedco Proceedings No. 04 dated 13/03/2018**

வணக்கம்,

தமிழ்நாடு மின் வாரியத்தில் பல ஆண்டுகளாக ஒப்பந்த தொழிலார்களாக பணிபுரிந்து வருகிறோம். எங்களை அடையாளம் கண்டு நிரந்தரப்படுத்திட பல்வேறு கட்ட போராட்டங்களின் மூலம் கோரிக்கைகளை தங்களது கவனத்திற்கு கொண்டு வந்து வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளோம்.

நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில், மின்சார உற்பத்தி விநியோகம், பொதுக்கட்டுமான பிரிவில் அங்கு பணிகளில் தொடர்ச்சியான பணியாற்றி வருகின்றேன். தமிழகத்தில் 'தானே புயல், சென்னை பெருவெள்ளம், வார்தா புயல், மற்றும் ஒக்கி புயல் என அனைத்து பேரிடர் நிவாரண பணிகளிலும், எங்களது பணி சிறப்பான பணியாகும், பணியாற்ற வேண்டும் என்ற நிலை வந்தபோது, லாரிகளில் சென்று கிடைத்த உணவை உண்டு, வெறும் தரையில் படுத்து உறங்கி பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணிகள் விரைந்து செய்து சீரான மின் விநியோகத்தை வழங்கி, வாரியத்திற்கும் தமிழக அரசிற்கும் நற்பெயர் கிடைக்க பாடுபட்ட தொழிலாளர்கள் நாங்கள்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சிட், K2 அக்ரிமெண்ட் முறையிலும் சில நேரங்களில் உதவிப் பொறியாளர் நேரடியாக கூலி தரும் முறையிலும் பணி புரிந்து வருகிறோம். எங்களுக்கு மின்வாரியத்தில் உள்ள கம்பம் நடுதல், கம்பி இழுத்தல், புதிய மின்பாதை, மின் மாற்றி அமைத்தல், உள்ளிட்ட பணிகளையும் செய்து வருகிறோம்.

தற்போது 22.02.2018 அன்று மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுக்கான முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பார்வையில் கண்ட வாரிய உத்தரவின் படியும் மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு தினக்கூலியாக ரூ.380/- நேரிடையாக வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மின்வாரியத்தில் எங்கு பணியாற்றினாலும், எவ்வளவு நாள் பணியாற்றினோம், வாரிய உத்திரவின் அடிப்படையில் நாள் கூலியாக ரூ.380/- பெற வகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, பல ஆண்டுகளாக பணிபுரியும் எங்களை அடையாளங்கண்டு வாரியமே நேரிடையாக கூலி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் உண்மையுள்ள

**நன்றி**!

**நகல்**

**செயலாளர்/ மின் ஊழியர் மத்திய அமைப்பு**

**..............................கிளை**